இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வெள்ளிக்கிழமை 12-05-2023

# திராவிடப் பண் பாடுவோம் 1

திராவிடத்தின் புதிய ஆய்வாளர்களில் ஒருவராக தன்னைப் பதிவு செய்து கொண்டு தனது அரைகுறை ஆராய்ச்சி முடிவுகளை வெளிப் படுத்தி வருகிறார் தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.இரவி அவர்கள். அவருக்கு இந்தப் பிரச்சினையின் தலையும் புரியவில்லை. வாலும் புரியவில்லை.

திராவிடம் என்ற சொல் ஒரு காலத்தில் இடத்தின் பெயராக - இனத் தின் பெயராக - மொழியின் பெயராக - வழங்கப்பட்டு வந்திருந்தாலும் இன்று திராவிடம் என்றால் அது ஒரு அரசியல் தத்துவத்தின் பெயராக இருக்கிறது. அதனைத்தான் ‘திராவிட மாடல் ஆட்சியின் இலக்கணம்’ என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லி வருகிறார்கள். சொல்லில் மட்டுமல்ல; செயலிலும் காட்டி வருகிறார்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் எழுதினார்கள்...

**“நாட்டிலே திராவிடச் சமுதாயத்துக்கு இழைக்கப்பட்டு வரும் கொடுமைகளும், அக்கிரமங்களும் யாரையும் எளிதிலே ஆத்திரமூட்டக் கூடியவனவாகவே உள்ளன. நாடாண்ட சமு தாயம், இன்று, நாலாம் ஜாதி, ஐந்தாம் ஜாதி என்ற இழி நிலை யில் வைக்கப்பட்டுப் பாழ்படுத்தப்படுகிறது. பண்புகள் பரிகசிக் கப்பட்டு, நிலைகுலைக்கப்பட்டு, திராவிடச் சமுதாயம் சீர்குலைக்கப்பட்டு வருகிறது. அரசியல் துறையிலே அடிமை களாக்கப்பட்டு, திராவிடர்கள், அவதிக்குள்ளாக்கப் படுகின்ற னர். பொருளாதாரத் துறையிலே திராவிடப் பெருங்குடி மக்கள் தரித்திரர்களாக நலிகிறார்கள். சொந்த நாட்டினின்றும் துரத் தியடிக்கப்பட்டு ஒரு கவளம் சோற்றுக்காக, வேற்று நாடுகள் சென்று, மானமிழந்து, மரியாதை இழந்து, அந்த நாடுகளின் அடக்குமுறைகளுக்கு ஆட்பட்டு, அவதியுறுகிறார்கள்.**

**இந்தக் கொடுமைகளை நிரந்தரமாக்கிவிடும் பயங்கர முயற்சியும் இடைவிடாது நடைபெறுகிறது. அந்த நிலையில் திராவிட மக்கள் சட்டங் களை மீறியும் பலாத்காரத்திற்கு உட்பட்டும் செயல்பல புரிவதைத் தடுத்து நிறுத்தி அமைதியும், அறிவும் கொண்டதும், கண்ணியமும். கட்டுப்பாடும் நிரம்பியதும் ஆன நடவடிக்கைகளில் திராவிட முன்னேற்றக் கழகம், ஈடு பட்டுச் செயல்பட்டு வருகிறது. ஏனென்றால், சட்டத்தின் மாண்பை மதிப் பது கோழைத்தனமல்ல என்று தி.மு.கழகம் மனதார நம்புகிறது”** (நம்நாடு 17-8-1952) என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் எழுதி னார்கள். இத்தகைய திராவிட சமுதாயத்தை மீட்பதற்காகத்தான் திராவிட முன்னேற்றக் கழகம் உருவாக்கப்பட்டது. அரசியல் களத்தில் போராடியது. வாதாடியது. தேர்தலின் மூலமாக வென்று சட்டமன்றத் துக்குச் சென்றது.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் கனவுகள் என்பவை தமிழ்ச் சமுதாயத்தின் கனவுகளாக இருந்ததால்தான் ஆட்சி அமைக்கும் அதி காரத்தை நாட்டு மக்கள் அக்கட்சிக்கு வழங்கினார்கள். ஆறாவது முறையாக ஆட்சியை அமைத்து இன்று தமிழ்நாட்டை ஆண்டு கொண்டு இருக்கிறது திராவிட முன்னேற்றக் கழகம் என்ற பேரியக்கம்.

திராவிட முன்னேற்றக் கழகம் முதல்முறையாக 1967 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்தபோது,

**“நாம் முதன்முதலாக ஆட்சிக்கு வந்திருக்கிறோம் என்று கூடச் சொல்ல முடியாது. ஏனென்றால் நமது தாய்க் கழகமாம் நீதிக்கட்சி இந்த நாட்டை ஆண்டிருக்கிறது. நாம் நீதிக்கட்சியின் தொடர்ச்சி, நீட்சி” என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன் னார்கள். ‘தென்னிந்திய நல உரிமைச் சங்கம்’ என்று தொடக் கத்தில் பெயர் சூட்டினாலும் பிற்காலத்தில் அதுதான் திராவிடர் கழகமாக பெயர் சூட்டிக் கொண்டது. அந்த வகையில் திராவிட இயக்கக் கொள்கை மரபு என்பது 100 ஆண்டுகளைக் கடந்த தாக உள்ளது.**

**100 ஆண்டுகள் கழித்து வந்து, ‘திராவிடமா அப்படின்னா என்ன?’ என்று கேட்கிறார் ஆளுநர். “திராவிட மாடல் அரசை அங்கீகரிக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். முதலில் அப்ப டியொரு நிர்வாகமே கிடையாது. திராவிட மாடல் என்பது வெறும் அரசியல் முழக்கம்தான். ஒரே பாரதம் - ஒரே இந்தியா என்ற கொள்கையை ஏற்காத மற்றும் காலாவதியான கோட் பாட்டை தூக்கிப் பிடிக்கும் வெற்று முயற்சி இது”** - என்று சொல்லி இருக்கிறார் ஆளுநர்.

சுயமரியாதை - சமூகநீதி - சமத்துவம் - சகோதரத்துவம் - மதச் சார்பின்மை - கூட்டாட்சித் தத்துவம் - அதிக அதிகாரங்களைக் கொண்ட மாநிலங்கள் - அனைத்துத் தேசிய இனங்களுக்கும் சம உரிமை - ஆகியவைதான் திராவிட மாடல் அரசின் உள்ளடக்கம் ஆகும் என்று முதலமைச்சர் சொல்லி வருவது ஆளுநருக்குப் புரிய வில்லையா?

“தந்தை பெரியார் காலத்தில் பேசியது சமூக சீர்திருத்தம். நாம் இன்று நடைமுறைப்படுத்தி வருவது சமூக வளர்ச்சி. சீர்திருத்தத்தின் அடுத்த பரிமாணம்தான் இன்றைய கழக அரசு உருவாக்கி வரும் சமூக, அரசியல், பொருளாதார, கல்வி, தொழில் வளர்ச்சியாகும். இதைத்தான் திராவிட மாடல் என்கிறோம். ஒரு சீர்திருத்த இயக்கம் ஆட்சிக்கு வந்தால் எத்தகைய கொள்கையை சட்டமாகவும் திட்ட மாகவும் நிறைவேற்றுமோ அவை அனைத்தையும் நிறைவேற்றிக் காட்டிய இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகமும், அதன் அரசும்” என்று முதலமைச்சர் சொல்லி வருவது ஆளுநருக்குப் புரிய வில்லையா?

**இவர் இப்படி பேசப் பேசத்தான் திராவிடப் பண் அதிகமாகப் பாட வேண்டிய அவசியம் ஏற்படுகிறது.**

தொடரும்




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (10.05.2023) தலைமைச் செயலகத்தில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை சார்பில் கோயம்புத்தூர் வ.உ.சி. பூங்காவில் வ.உ.சிதம்பரனார் அவர்களுக்கும், மயிலாடுதுறையில் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் அவர்களுக்கும், புதுக்கோட்டையில் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அம்மையார் அவர்களுக்கும், 66 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள திருவுருவச் சிலைகளை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், சட்டத் துறை அமைச்சர் எஸ். இரகுபதி, செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் மரு. இரா. செல்வராஜ், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் த. மோகன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (10.05.2023) முகாம் அலுவலகத்தில், கழகத்தின் மூத்த முன்னோடி முன்னாள் அமைச்சர் மறைந்த கோ.சி.மணி அவர்களின் பேரன் டாக்டர் கோ.சி.மதி. திருமாவளவன் அவர்களின் மகனுக்கு மதியரசன் என்று பெயர் சூட்டினார். உடன் திருமதி துர்கா ஸ்டாலின் மற்றும் அவரது குடும்பத்தினர் உள்ளனர்.

### இந்து சமய அறநிலையத் துறை சார்பில் ரூ.30.43 கோடியில்

# ஆணையர் அலுவலக கூடுதல் கட்டடம் - பக்தர்கள் வரிசை வளாகம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

**சென்னை, மே 12-**

**இந்து சமய அறநிலையத்துறையின் சார்பில் ரூ.30.43 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள நவீன வசதிகளுடன் கூடிய ஆணையர் அலுவலக கூடுதல் கட்டடம், பக்தர்கள் வரிசை வளாகம், திருமண மண்டபம் ஆகியவற்றை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (10.05.2023) தலைமைச் செயலகத்தில், இந்து சமய அறநிலையத்துறை சார் பில் சென்னை, நுங்கம்பாக்கம், இந்து சமய அறநி லையத் துறை ஆணையர் அலுவலகத்தில் 30 கோடியே 43 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட் டுள்ள கூடுதல் கட்டடம், திருச்சிராப்பள்ளி மாவட்டம், சமயபுரம், மாரியம்மன் திருக்கோயிலில் பக்தர்கள் வரிசை வளாகம், விழுப்புரம் மாவட்டம், திருவெண் ணெய் நல்லூர், கிருபாபுரீஸ்வரர் திருக்கோயிலில் திருமண மண்டபம் ஆகியவற்றை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.

இந்து சமய அறநிலையத்துறை தனது நிர்வாக கட்டுப்பாட்டிலுள்ள 674 திருக்கோயில்களுக்கு குட முழுக்கு, தொன்மை வாய்ந்த திருக்கோயில்களில் திருப்பணிகள் மேற்கொள்ளுதல், பிரசித்தி பெற்ற திருக்கோயில்களை பெருந்திட்டத்தின் மூலம் மேம் படுத்துதல், திருத்தேர்களை பழுதுபார்த்து வீதிஉலா, திருக்குளங்களை புனரமைத்தல், பக்தர்களுக்குத் தேவையான வசதிகளை மேம்படுத்துதல், திருக் கோயிலுக்குச் சொந்தமான 4,300 கோடி ரூபாய் மதிப்பிலான சொத்துக்கள் மீட்பு, என பல்வேறு திட்டங் களை செயல்படுத்தி, சட்டமன் றத்தில் அறிவிக்கப்பட்ட அறி விப்புகளையும் தொடர்ந்து சிறப்பாக செயல்படுத்தி வரு கிறது.

அந்த வகையில், 2021-2022ஆம் ஆண்டிற்கான இந்து சமய அறநிலையத் துறை மானியக் கோரிக்கை யில், “ஆணையர் அலுவலக வளாகத்தில் நவீன வசதிகளு டன் கூடிய கூடுதல் கட்டடம் 15 கோடி ரூபாய் செலவில் கட்டப் படும்” என அறிவிக்கப்பட்டது. அதனை செயல்படுத்திடும் வகையில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 25.04.2022அன்று ஆணை யர் அலுவலக வளாகத்தில் 15 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நவீன வசதிகளுடன் கூடிய கூடுதல் கட்டடத்திற்கான கட்டு மான பணிகளை தொடங்கி வைத்தார்.

இந்து சமய அறநிலையத்துறையின் வரலாற்றி லேயே இல்லாத அளவில் முதன்முறையாக ஒப் பந்த காலத்திற்கு 6 மாதங்களுக்கு முன்னதாகவே 15 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் அலுவலக கூடுதல் கட்டடத்தை தமிழ்நாடு முதலமைச்சர் அவர் கள் திறந்து வைத்தார். இந்த ஆணையர் அலுவலக கூடுதல் கட்டடமானது, மூன்று தளங்களுடன், 33,202 சதுரடி பரப்பளவில், மாவட்ட வருவாய் அலுவலர் நிலையிலான தனி அலுவலர்களின் அறைகள், தலைமைப் பொறியாளரின் அறை, இணை ஆணையர்களின் அறைகள், உதவி ஆணையர்களின் அறைகள், திருப்பணி பிரிவு, பொறியியல் பிரிவு, உணவகம், வாகனங்கள் நிறுத் துமிடம், மின்தூக்கி போன்ற வசதிகளுடன் கட்டப் பட்டுள்ளன.

மேலும், திருச்சிராப்பள்ளி மாவட்டம், சமயபுரம், மாரியம்மன் திருக்கோயிலில் 13 கோடியே 80 இலட்சம் ரூபாய் செலவில், திருக்கோயில் வரிசை வளாகத்தில் 4 நுழைவு மண்டபங்கள், 4 அவரச கால வழிகள், காத்திருப்பு கூடம், பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி, கழிப்பறைகள், திருக்கோயில் பயன் பாட்டிற்கான கடைகள், மருத்துவ மையம், கட்டண சீட்டு விற்பனை மையம், பிரசாத விற்பனை நிலை யம், பக்தர்கள் அமர்ந்து செல்லும் வகையில் கிரா னைட் கற்களால் ஆன இருக்கைகள், எஸ்.எஸ். தடுப்புகள், கண்கவர் விளக்குகள், மின் விசிறிகள் உள்ளிட்ட வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள பக்தர்கள் வரிசை வளாகம்; விழுப்புரம் மாவட்டம், திருவெண் ணெய்நல்லூர், கிருபாபுரீஸ்வரர் திருக்கோயிலில் 1 கோடியே 63 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட் டுள்ள திருமண மண்டபம் ஆகியவற்றை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேற்று முன்தினம் திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தலைமைச் செயலாளர் முனைவர் வெ.இறையன்பு, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செய லாளர் டாக்டர் பி.சந்தர மோகன், இந்து சமய அறநிலையத்துறை சிறப்பு பணி அலுவலர் ஜெ.குமர குருபரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர். மேலும், காணொலிக் காட்சி வாயி லாக சென்னை, நுங்கம்பாக்கம், இந்து சமய அறநி லையத் துறை ஆணையர் அலுவலகத்திலிருந்து ஆணையர் க.வீ.முரளீதரன், கூடுதல் ஆணையர் கள் திருமதி ந.திருமகள், திருமதி சி.ஹரிப்ரியா மற் றும் அரசு உயர் அலுவலர்கள், திருச்சிராப்பள்ளி மாவட்டம், சமயபுரத்திலிருந்து திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர் மா.பிரதீப்குமார், அரசு உயர் அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், விழுப்புரம் மாவட்டம், திருவெண்ணெய் நல்லூரிலிருந்து விழுப்புரம் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் சி. பழனி, அரசு உயர் அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புக ளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (10.05.2023) தலைமைச் செயலகத்தில், பெரம்பலூர் மாவட்டத்தைச் சேர்ந்த பார்வையற்ற மாற்றுத்திறனாளி செல்வி பாப்பாத்தி அவர்களுக்கு தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தில் வெளிமுகமை மூலம் அலுவலக உதவியாளராகப் பணிபுரிவதற்கான ஆணையினை வழங்கினார்கள். உடன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் மேகநாத ரெட்டி மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.